# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)
*******

முறையீட்டு மனு எண். **073/மாநகராட்சி/2018**

நாள் : **20/08/2018**

**திரு S.P. தியாகராஜன்,**
**கோயம்புத்தூர் – 28.** – **முறையீட்டு மனுதாரர்**

**1. மாநகராட்சி ஆணையர்,**
**கோயம்புத்தூர் மாநகராட்சி,**
**2. மாமன்ற செயலாளர்,**
**கோயம்புத்தூர் மாநகராட்சி,**
**கோயம்புத்தூர்..** – **எதிர் மனுதாரர்**

கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் மாநகராட்சி, சவுரிபாளையம், 21, G.R.G நகர் என்ற முகவரியில் வசிக்கும் திரு S.P. தியாகராஜன் அவர்களின் 24.03.2018 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு 073/2018 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு மற்றும் அவரது வாக்குமூலம், மாநகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் மாமன்ற செயலர் / சட்ட அலுவலரின் வாக்குமூலம் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் மாநகராட்சி, சவுரிபாளையம், 21, G.R.G நகர் என்ற முகவரியில் வசிக்கும் திரு S.P. தியாகராஜன் என்பவர், கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட நூறு வார்டுகள் தொடர்பான பணிகள் குறித்து தனி அலுவலர் அவர்களின் மாமன்றத் தீர்மானங்கள் 2017–ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் முதல் 24.03.2018 வரை மாநகராட்சி இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படாமல் உள்ளதென்றும், இச்செயல் ஊழலுக்கு துணை போவதாக கருத வேண்டியுள்ளது என தனது முறையீட்டு மனுவில் குறிப்பிட்டுள்ளார். மேலும், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் வழங்கக் கோரும் தகவல்களுக்கு ஆயிரக்கணக்கில் பணம் செலுத்த மாநகராட்சி கோருவதாகவும் தெரிவித்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் முறையீடு குறித்து கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையர் தனது 14.05.2018 நாளிட்ட கடிதத்தில் அறிக்கையினை சமர்ப்பித்துள்ளார். தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாநகராட்சிகளிலும் (சென்னை மாநகராட்சி நீங்கலாக) UTIS(Urban Tree Information

System) என்ற புதிய மென்பொருளுடன் அனைத்து மாநகராட்சிகளினுடைய இணையதளங்களை ஒருங்கிணைக்கும் பணிகளை 2017–ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் முதல் அக்டோபர் திங்கள் வரை மேற்கொண்டதால், மாநகராட்சி இணையதளத்தில் தகவல்களை பதிவேற்றம் செய்யும் பணிகளில் தொய்வு ஏற்பட்டது என்றும் மேலும், 2017–ஆம் ஆண்டு நவம்பர் மற்றும் டிசம்பர் திங்கள்களில் சொத்துவரி மறு சீராய்வு சம்பந்தப்பட்ட பணிகளை உள்ளீடு செய்ததால், மற்ற இணைதளப் பணிகளை மேற்கொள்ளப்படாத நிலை ஏற்பட்டது என்றும், இதனைத் தொடர்ந்து, நூறு வார்டுகளுக்கான மறுவரையறை பணிகள் மேற்கொள்ளப்பட்டு உத்தேச வரைவுப் பட்டியல் மற்றும் வரைபடங்களை இணையதளம் மூலமாக வெளியிட்டதால், பணிப் பளுவின் காரணமாக இணையதளம் பயன்படுத்த இயலாத அளவுக்கு கணினி செயலிழப்பு ஏற்படும் நிலை இருந்ததாகவும், 2018–ஆம் ஆண்டு தொடக்கத் திங்கள்களில், பொதுமக்கள் எளிதாக வரி செலுத்தும் பொருட்டு 58 வரி வசூல் மையங்களாக கூடுதலாக்கப்பட்டு இணையதளம் வாயிலாக வரி வசூல் பணிகள் மேற்கொள்ளப்பட்டதாகவும், மேலும், நகராட் சி நிர்வாக ஆணையரகத்தின் அறிவுரையின்படி மேற்குறிப்பிட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டதால், மாமன்றத் தீர்மானங்களை இணையதளத்தில் வெளியிட இயலாத நிலை ஏற்பட்டது எனவும் கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். மேலும், 2017–ஆம் ஆண்டு ஜூலை திங்கள் முதல் 2018–ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் முடிய உள்ள மன்றத் தீர்மான நகல்களை வழங்குவதற்கு மாமன்றத் தீர்மானம் எண்.19, நாள் 27.04. 2012–இன் படி ஒரு தீர்மானத்திற்குக் குறைந்தது மூன்று பக்கங்களுக்கு ரூபாய் நூறும், அதன் பிறகு ஒவ்வொரு பக்கத்திற்கும் பத்து ரூபாய் பெறப்படவேண்டும் என்றும் அதன்படி தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் கோரப்பட்ட மன்றத் தீர்மான நகல்களுக்கு ரூபாய் 18,710/– செலுத்தப்படவேண்டும் என மனுதாரருக்குத் தெரிவிக்கப்பட்டதையும் மாநகராட்சி ஆணையர் குறிப்பிட்டுள்ளார்.

3. முறையீட்டு மனுதாரர் மற்றும் அவரது சாட்சியான திரு ஜெ. டேனியல் ஏசுதாஸ் ஆகியோரிடம் 30.05.2018 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலங்கள் பெறப்பட்டன. விசாரணையின்போது முறையீட்டு மனுதாரர் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் கோரிய விவரங்கள் மற்றும் அதற்கு மாநகராட்சி அளித்த விவரங்கள் குறித்து தமிழ் ஆங்கில நாளிதழ்களில் செய்திகள் வெளியாகியுள்ளன என்பதைச் சுட்டிக்காட்டினார். மேலும், தகவல்களை அடங்கிய குறுந்தகடுகளை வழங்குவது மாநகராட்சியின் சட்டபூர்வமான கடமை என்றும், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் கோரிய விவரங்களுக்கு ரூ. 18,710/– செலுத்த அறிவுறுத்தியதையும் விசாரணையின்போது முறையீட்டு மனுதாரர் குறிப்பிட்டார். முறையீட்டு மனுதாரரின் மேற்குறிப்பிட்ட சாட்சியாளரும் மாமன்றத் தீர்மானங்கள் மாநகராட்சி இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படவில்லையென்றும், அதனால் மாநகராட்சியில் என்ன நடக்கிறது என்று பொதுமக்கள் அறிய முடியாத நிலையே உள்ளது என்று குறிப்பிட்டார்.

4. கோயம்புத்தூர் மாநகராட்சியின் மாமன்றச் செயலர் / சட்ட அலுவலர் திரு ஆ. அமல்ராஜ் அவர்களிடமும் 12.07.2018 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. மாநகராட்சி ஆணையர் தனது 14.05.2018 நாளிட்ட அறிக்கையில் தெரிவித்த விவரங்களையே மேற்படி மாமன்றச் செயலாளரும் விசாரணையின்போது தெரிவித்தார். மேலும், 2012–ஆம் ஆண்டு மாமன்றம் தீர்மானம் நிறைவேற்றியபோது, தகவல் அறியும் உரிமைச் சட்ட விதிகளில் குறிப்பிடப்பட்டிருந்த கட்டண விவரங்களை மாமன்றம் கவனத்தில் கொள்ளவில்லை என்றும் குறிப்பிட்டார். இணையதளத்தில் வேறு பணிவிவரங்களை பதிவேற்றம் செய்யும் காரணத்தினால், மன்றத் தீர்மானங்களை பதிவேற்றம் செய்ய இயலாது எனத் தெரிவித்த உதவிக் கணினி அமைப்பாளர்தான், இணையதளத்தை அப்டேட் செய்வதற்கும் தீர்மானங்களை பதிவேற்றம் செய்வதற்கும் சம்பந்தம் இல்லை என நாளிதழ்களுக்கு தெரிவித்ததையும் விசாரணையின்போது குறிப்பிட்டார்.

5. இந்நேர்வில், முறையீட்டு மனுதாரரின் வாக்குமூலம், மாநகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் மாநகராட்சி மன்றச் செயலாளரின் வாக்குமூலம், நாளிதழ் செய்திகள் மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் Urban Tree Information System குறித்த கடிதங்கள் ஆகியவைகள் பரிசீலிக்கப்பட்டதில் மாநகராட்சி மாமன்றத் தீர்மானங்கள் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யாமல் இருப்பதற்கான காரணங்கள் ஏற்புடையதாக இல்லை. எனவே, கோயம்புத்தூர் மாநகராட்சியில் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப் படுவதற்கான நடவடிக்கையினை உடனுக்குடன் மேற்கொள்வதுடன், 2017–ஆம் ஆண்டு ஜூலை திங்கள் முதல் நடப்புத் திங்கள் வரையிலான மன்றத் தீர்மானங்களை இணையதளத்தில் உடன் பதிவேற்றம் செய்யும் நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையருக்கு அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

6. முறையீட்டு மனுதாரரின் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் தகவல்களை வழங்காதது மற்றும் அதிக கட்டணம் குறித்த முறையீடுகள் தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005–ன் கீழ் வருவதால், அம்முறையீடுகள் இம்முறைமன்ற விசாரணைக்கு உகந்ததல்ல எனக்கருதி, அம்முறையீடுகள் குறித்து, உரிய அமைப்பை அணுகும்படி முறையீட்டு மனுதாரரை அறிவுறுத்தி அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

**2018–ஆம் ஆண்டு, ஆகஸ்ட் திங்கள், 20–ஆம் நாளன்று,** என்னால் கைஒப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

24/8/2018
செயலாளர்.

24.8.18

24/8/18

பெறுநர்

1. **திரு S.P. தியாகராஜன்,**
   **21, G. R. G நகர்,**
   **சவுரிபாளையம்,**
   **கோயம்புத்தூர் – 28.**

2. **மாநகராட்சி ஆணையர்,**
   **கோயம்புத்தூர் மாநகராட்சி,**
   **கோயம்புத்தூர்.**

**நகல் :** **முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்**
**பிரிவு அலுவலர் (நிர்வாகம்)**
**பேரூராட்சி பிரிவு – 3**
**இ.கோ. / உதிரி**